*1995 மார்ச் 17]*

***மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது வழங்கப்பட்டிருக்கின்ற அரசு ஆணையின்படி 1-6-94 முதல் அவர்களுக்கு ஊதியம் கொடுக்கப்படும். இதற்கும் முன்பு 1992-ல் வழங்கப்பட்ட ஆணையின்படி 1-6-91 முதல் முன்தேதியிட்டு ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** வினா எண் 56, திரு. ஆர்.டி. அரங்கநாதன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**56—**

**விருத்தாசலம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி கட்டிடங்களைச் சீர் செய்தல்**

**24618—திரு. ஆர்.டி. அரங்கநாதன்:*

***மாண்புமிகு கல்வி அமைச்சர்:*** கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் நகரில் உள்ள அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் கட்டிடங்கள் இடிந்து பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அந்த இடிந்த கட்டிடங்களை சீர்செய்து மேலும் புதிய கட்டிடங்கள் கட்டித்தர அரசு முன்வருமா?

***மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம் விருத்தாசலம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பழுதடைந்த கட்டிடங்களை புதுப்பித்து கட்டுவதற்காக மாவட்ட ஆட்சித் தலைவரின் நிதி ஒதுக்கீட்டின்கீழ் 3 வகுப்பறைகள் கொண்ட கட்டிடம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. அரிமா சங்கத்தின் மூலம் 4 வகுப்பறைகள் கொண்ட ஒரு கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டத்தின் (டிஸ்ட்ரிக்ட் டீசென்ட்ரலைசேஷன் பிளான்) கீழ் இரண்டு வகுப்பறைகள் கொண்ட கட்டிடம் கட்ட அடித்தளம் போடப்பட்டு வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன. கட்டிடப் பழுதுகளை சீர் செய்யும் வேலைகள் பொதுப்பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

[*1995 மார்ச் 17*

**திரு. ஆர்.டி. அரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரதி கண்ட புதுமைப் பெண்ணாம் எங்களது இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் நல்லாட்சியில்தான் இன்றைக்கு பெண்கள் சமுதாயம் தலை நிமிர்ந்து நிற்கிறது என்றால் அது மிகையாகாது என்ற அளவிலே இந்த அரசு பெண்களின் மேம்பாட்டுக்காக செயல்பட்டுக்கொண்டு வருகின்ற நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதில் உரையிலே இந்தப் பள்ளிக்காக, 3 வகுப்பறைகள் கொண்ட கட்டிடம் அரசாங்கத்தின் மூலமும், அரிமா சங்கத்தின் மூலமாக 4 வகுப்பறைகள் கொண்ட கட்டிடமும் கட்டப்பட்டுள்ளன என்று இங்கே குறிப்பிட்டு சொன்னார்கள். அந்தப் பள்ளியைப் பற்றி சொல்ல வேண்டும் என்றால் (குறுக்கீடு).

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியாகக் கேளுங்கள். பள்ளியைப் பற்றிய விளக்கம் வேண்டாம். பேரவையின் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. ஆர்.டி. அரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கிற நேரத்திலே இந்த பள்ளி அதிகமான மாணவியர்களைக் கொண்ட பள்ளியாக இருக்கின்ற காரணத்தினாலே, ஆண்டு தோறும் இந்த பள்ளிக்கு, அந்த நகரத்தை மையமாகக் கொண்டிருக்கும் சுமார் 50 கிராமங்களுக்கு மேல் இருக்கின்ற பகுதிகளிலிருந்து மாணவியர்கள் ஆண்டுதோறும் அதிகமாக சேர்ந்து அதிக எண்ணிக்கை கொண்ட பள்ளியாக இருக்கின்ற அந்த பள்ளிக்கு கூடுதல் பள்ளிக்கூட கட்டிடம் இன்றைக்குத் தேவைப்படுகின்ற காரணத்தினால் இன்னும் அதிக அளவிலே அந்தப் பள்ளிக்குத் தேவையான பள்ளிக்கட்டிடம் கட்டித் தருவதற்கும், அந்தப் பள்ளிக்கூட கட்டிடம், முன்பு இருந்து வந்த கட்டிடம், சற்று பழுதடைந்து இருக்கின்ற காரணத்தினால், அந்த கட்டிடம் இப்போது பழுதுபார்க்கின்ற ஒரு நிலையில் இருக்கின்றது. ஆகவே, பழுதுபார்ப்பதை விரைவுபடுத்தி, அந்தக் கட்டிடத்தை பழுதுபார்ப்பதற்கும் புதிய கட்டிடங்கள் கட்டித் தருவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று இந்த நேரத்தில் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிலே 14 வகுப்பறைகள் இருந்தன. 4-12-1993 மற்றும் 5-12-1993 அன்று புயல் மழை காரணமாக மணிமுக்தாநீர்

*1995 மார்ச் 17*]

உட்புகுந்து 8 வகுப்பறைகள் சேதம் அடைந்தன. அதற்குப் பதிலாக இப்போது 7 வகுப்பறை கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மற்றும் 2 வகுப்பறைகளுக்கான கட்டிடம் அடித்தளம் போடப்பட்டு இப்போது பணி தொடங்கப்பட்டிருக்கிறது. ஆகவே முன்பு இருந்ததை விட ஒரு வகுப்பறை இந்த ஆண்டிலே அதிகமாக அந்த பள்ளிக்கு கிடைக்க இருக்கிறது. இந்த ஒரு பள்ளிக்கு மட்டுமல்ல. தமிழகத்திலே அனைத்து பள்ளிகளிலும் எல்லா வசதிகளும் இருக்கவேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். இது தொடர்பாக எந்தெந்த பள்ளிகளுக்கு வகுப்பறை வசதிகள் வேண்டும், குடிநீர் வசதிகள் வேண்டும், சுற்றுச்சுவர் வசதி வேண்டும், விளையாட்டுத் திடல் வேண்டும், இருக்கைகள் வசதி வேண்டும் என்றெல்லாம் ஆய்வு நடத்தச் சொன்னார்கள். அந்த ஆய்வின் அடிப்படையிலே அவர்களுக்கு ஒரு அறிக்கையை தந்தோம். இதை 3 ஆண்டுக்காலத்தில் எல்லா பள்ளிகளுக்கும் கிடைக்கக்கூடிய அளவிலே செய்யவேண்டும் என்று மாநில அளவிலே பல துறைகளை இணைத்து ஒரு குழுவை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அமைத்திருக்கிறார்கள். மாவட்ட அளவில் ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் தலைவராக இருக்கிறார். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை மிக விரைவிலே நிறைவேறுகின்ற வாய்ப்பு இருக்கிறது. இதற்கு மேல் கட்டிடம் வேண்டுமென்றால் அரசிடத்திலே ஒரு திட்டம் இருக்கிறது. அதாவது பெற்றோர் ஆசிரியர் கழகத்திலிருந்து சரிபாதி தொகையை செலுத்துவது என்று அவர்கள் தீர்மானம் இயற்றி அனுப்பினால், அரசு மறுபாதித் தொகையை அளிப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது. இந்த வாய்ப்பை உறுப்பினர் அவர்கள் சரியான முறையிலே பயன்படுத்த முயற்சி எடுக்கலாம்.

**திரு. ஆர்.டி. அரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பள்ளியைப் பொறுத்தமட்டில் இருக்கின்ற அந்த பெற்றோர் ஆசிரியர் கழகம் இன்று சரிவர இயங்காத நிலையில் இருந்து வருகிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட அந்த பள்ளியினுடைய தலைமை ஆசிரியருக்கு இந்த பெற்றோர் ஆசிரியர் கழகத்தை மாற்றியமைத்து வேறு நபர்களை அதிலே அங்கம் பெறச்செய்து, புதிதாக வருகின்ற அந்த அமைப்பின் மூலமாக அந்தப் பள்ளியினுடைய பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் சார்பிலே அந்த பள்ளியிலே கூடுதல் கட்டிடம் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதுணையாக இருப்பாரா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெற்றோர் ஆசிரியர் கழகத்திலே அரசு தலையிடமுடியாது. தேர்தல் மூலமாகத்தான் அங்கே மாற்றங்களைக் கொண்டுவரமுடியும். அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் கவனிக்கலாம். இந்த கட்டிடம் கட்டுவதற்கு 50 விழுக்காடு தொகையை பெற்றோர் ஆசிரியர் கழகம் அல்லது சட்டமன்ற உறுப்பினர் அவர்களது முயற்சியிலேகூட செலுத்தலாம். ஆகவே அதற்கான முயற்சிகளை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் மேற்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 57, திருமதி ஜெ. லோகாம்பாள், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**57—**

வரகுப்பை கிராமத்திற்கு குடிநீர் வழங்குதல்

*10380—**திருமதி. ஜெ. லோகாம்பாள் :**

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) லால்குடி வட்டம், புள்ளம்பாடி ஒன்றியம், வரகுப்பை கிராமத்தில் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க அருகில் உள்ள சிறுகளப்பூர் கிராமத்திலிருந்து குடிநீர் கொண்டு வர அரசிடம் திட்டமுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : வரகுப்பை கிராமத்திற்கு குடிநீர் வழங்கும் திட்டப்பணிகள், சனவரி 1994-ல் முடிக்கப்பட்டு, 9-3-94-ல் பராமரிப்பிற்காக புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றியத்தின் வசம் இந்தத் திட்டம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**திருமதி ஜெ. லோகாம்பாள்:** மாண்புமிகு சட்டமன்ற பேரவைத் தலைவர் அவர்களே, சிறுகளப்பூர் கிராமமானது மிகவும் பின்தங்கிய